




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








ஞாயிறு ❖ மே. 28, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 233 ❖ ரூ.10


## தமிழகத்தில் அங்கீகாரத்தை இழக்கும் 3 அரசு மருத்துவக் கல்லூரிகள்

# அபாயம்

## 500 எம்பிபிஎஸ் இடங்களை கொண்டுள்ள கல்லூரிகளில் சிசிடிவி மற்றும் பயோ மெட்ரிக் வருகைப் பதிவு குறைபாடு காரணமாக அங்கீகாரத்தை திரும்ப பெற முடிவு

**சென்னை , மே. 28-**
**தமிழகத்தில் அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட 3 மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இளங்கலை இடங்களுக்கான அங்கீகாரத்தை திரும்பப் பெற இளநிலை மருத்துவக் கல்வி வாரியம் முடிவு செய்துள்ளது.**



தமிழகத்தில் 38 அரசு மருத்துவக் கல்லூரிகள் தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) அனுமதியுடன் இயங்கி வருகின்றன. இந்த 38 அரசுக் கல்லூரிகளில் 5,225 எம்பிபிஎஸ் இடங்கள் உள்ளன. இவற்றில் 3 மருத்துவக் கல்லூரிகள் இளநிலை படிப்புகளுக்கான அங்கீகாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன்படி, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, திருச்சி அரசு கே.ஏ.பி விஸ்வநாதன் மருத்துவக் கல்லூரி மற்றும் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரிகள் இந்தச் சிக்கலை எதிர்கொண்டு உள்ளன.

பயோ மெட்ரிக் வருகைப் பதிவில் குறைபாடுகள் மற்றும் சிசிடிவி கேமராக்கள் திருப்திகரமாக இல்லை போன்ற காரணங்களை சுட்டிக்காட்டி இந்த 3 கல்லூரிகளுக்கு இளநிலை மருத்துவ வாரியம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இதன் காரணமாக இந்தக் கல்லூரிகள் உள்ள 500 எம்பிபிஎஸ் இடங்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, இந்த 3 மருத்துவக்கல்லூரிகளும் தமிழகத்தில் உள்ள பழமை வாய்ந்த மருத்துவக் கல்லூரிகள் ஆகும். சிசிடிவி மற்றும் பயோ மெட்ரிக் வருகைப் பதிவு குறைபாடு காரணமாக அங்கீகாரத்தை திரும்ப பெறும் வகையிலான நிகழ்வு நடைபெறுவது இதுதான் முதல் முறை என்று முன்னாள் மருத்துவ கல்வி துறை அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், முறையான பயோ மெட்ரிக் வருகைப் பதிவேடுதான் ஒரு மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள் உள்ளனர் என்பதற்கு சான்று ஆகும். அது போன்று சிசிடிவி காட்சிகள் தான் மருத்துவர்கள் மருத்துவமனைக்கு வந்து சென்றதற்கு சான்று. இவை இரண்டும் முறையாக இல்லாத காரணத்தால் இந்த நிகழ்வுகள் நடந்து உள்ளதாக முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த 3 மருத்துவக் கல்லூரிகளிலும் உடனடியாக இந்த வசதிகளை சரிசெய்ய தமிழக சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது. உடனடியாக இவற்றை சரிசெய்து அது தொடர்பான ஆவணங்களை இளநிலை மருத்துவக் கல்வி வாரியத்திற்கு சமர்பிக்க வேண்டும் என்று சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது. மேலும், இது மிகவும் சிறிய பிரச்சினைதான் என்பதால், ஆவணங்களை சமர்பித்த பிறகு உடனடியாக அனுமதி கிடைத்துவிடும் என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்லூரிகளின் அனுமதி தொடர்பாகவும், சுகாதாரத் துறையின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சரை சந்திக்க உள்ளதாக தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். இதன்படி வரும் ஜுன் மாதம் 1-ம் தேதி முதல் 10-ம் தேதிக்குள் மத்திய அமைச்சரை சந்திக்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

## டெல்லி மதுபானக் கொள்கை ஊழலைவிட தமிழகத்தில் பல நூறு மடங்கு ஊழல்: இபிஎஸ் குற்றச்சாட்டு

சென்னை, மே. 28-
"டெல்லி அரசில் நடைபெற்ற மதுபானக் கொள்கை ஊழலை விட பல நூறு மடங்கு ஊழல் தமிழகத்தில் திமுக ஆட்சியில் நடந்துள்ளது. சோதனையோடு நின்றுவிடாமல் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் தவறு இழைத்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வருமான வரித் துறை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய குண்டர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.



இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "கடந்த இரண்டு ஆண்டுகால திமுக ஆட்சியில் முதல்வரின் மகனும், மருமகனும் 30,000 கோடி ரூபாயை என்ன செய்வது என்று தெரியாமல் தவிப்பதாக அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் உரையாடிய டேப் லீக் ஆனதாக அனைத்து ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன. அமைச்சர் செந்தில்பாலாஜி வகித்து வரும்துறையில் ஒன்றான டாஸ்மாக் நிறுவனத்தில் உள்ள சுமார் 4000-க்கும் மேற்பட்ட பார்களின் லைசென்ஸ்கள் புதுப்பிக்கப்படாமல், சட்டத்திற்குப் புறம்பாக அவரதுகரூர்கம்பெனியால் நடத்தப்படுவதாக அனைத்து ஊடகங்களிலும், நாளிதழ்களிலும்செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இதனால், தமிழக அரசுக்கு கோடிக்கணக்கான வரி இழப்பு ஏற்படுகிறது. மேலும், இந்த சட்டவிரோத பார்கள் மூலம் கலால் வரி செலுத்தப்படாமல் மதுபான உற்பத்தி ஆலைகளில் இருந்து நேரடியாகமதுபானங்கள் விற்கப்படுகின்றன. இதனால் அரசுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்படுவதாக, அப்போதைய நிதியமைச்சர் பேட்டி அளித்திருந்தார்.மேலும், டாஸ்மாக் கடைகளில் பாட்டில் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் கூடுதலாக வசூலித்துத்தரவேண்டும் என்று, தாங்கள் கரூர் கம்பெனியைச் சேர்ந்தவர்களால் வற்புறுத்தப்படுவதாக டாஸ்மாக் ஊழியர்களே குற்றஞ்சாட்டி பேட்டி அளித்துள்ளனர்.

இதன் மூலம், பல்லாயிரம்கோடிரூபாய் ஊழல் நடைபெறுகிறது என்று நாளிதழ்களும், ஊடகங்களும்செய்திகள் வெளியிட்டுள்ளன. செந்தில்பாலாஜி, வருமான வரித்துறை அதிகாரிகள் சுவர் ஏறி குதித்ததாகக் கூறியுள்ளார். இதே, அதிமுகநிர்வாகிகள் மீது பொய்யான புகார்கள் புனைந்து தமிழக காவல் துறையால்சோதனைகள் செய்ததையும், அப்போது, முன்னாள் அமைச்சரான எஸ். பி. வேலுமணியின் வீட்டில் சுவர் ஏறி குதித்த தமிழக காவல் துறை நடவடிக்கையை ரசித்தவர்கள்தானே திமுக ஆட்சியாளர்கள்.

முறையாக வருமான வரி கட்டவில்லை என்றும்; வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதாகவும் வந்த செய்திகளின் அடிப்படையில் விசாரிக்க முறையாக வந்த மத்திய வருமான வரித்துறைஅதிகாரிகளை கரூரில் திமுக குண்டர்கள் அடித்து விரட்டி இருக்கிறார்கள். வருமான வரித்துறை அதிகாரிகளின் கார் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டுள்ளன. தாக்குதலுக்குள்ளான வருமான வரித்துறை பெண் அதிகாரி உட்பட 4 பேர், கரூர் மருத்துவமனையில் அவசரசிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருப்பது, நம் தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு சீர்கேட்டிற்கு உதாரனமாகும்.

ஆனால், இப்போது கடந்த இரண்டு நாட்களாக செந்தில்பாலாஜி குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் வீடுகள், அலுவலகங்கள் என்று பல இடங்களில் சோதனை நடந்து வருகிறது. தமிழகத்தில் எந்த தனியார் ஒப்பந்ததாரர்கள் வீடுகளில் சோதனை நடந்தாலும், அதில் எங்களை சம்பந்தப்படுத்தி அறிக்கைவிடும்பொம்மை முதல்வர் ஸ்டாலின் இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்? தற்போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் வீடுகளில் வருமான வரிச்சோதனை நடத்தப்படும்போது இதை கண்டிக்கின்றனர்.

ஆளும் கட்சியினர் முன் கைகட்டி நின்று சேவகம் செய்யும் ஒருசில தமிழக காவல் துறை அதிகாரிகளை அதிமுகவின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன். டெல்லி அரசில் நடைபெற்ற மதுபானக் கொள்கை ஊழலை விட பலநூறு மடங்கு ஊழல் தமிழகத்தில் இந்த திமுக ஆட்சியில் நடந்துள்ளது. சோதனையோடு நின்றுவிடாமல் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் தவறு இழைத்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வருமான வரித் துறை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய குண்டர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும்மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

## புதிய நாடாளுமன்ற கட்டிடம் இன்று திறப்பு விழா காண்கிறது ஏற்பாடுகள் தீவிரம்

புதுடெல்லி , மே. 28-
நாட்டின் புதிய நாடாளுமன்றத் திறப்பு விழா இன்று நண்பகல் 12 மணி அளவில் நடைபெற உள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



தற்போதுள்ள நாடாளுமன்றக் கட்டிடம் 1927-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. 96 ஆண்டுகள் பழமையான இந்தக் கட்டிடத்தில் தற்போதைய தேவைக்கேற்ப போதுமான இட வசதி இல்லாததால், புதிய நாடாளுமன்றத்தைக் கட்டுமாறு மக்களவை மற்றும் மாநிலங்களவை சார்பில் மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்து, புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தைக் கட்ட முடிவு செய்த மத்திய அரசு, அதற்கான அடிக்கல்லை கடந்த 2020-ம் ஆண்டு டிசம்பர் 10-ம் தேதி நாட்டியது.

புதியநாடாளுமன்றக் கட்டிடத்தைக் கட்டும் பணி டாடா ப்ராஜக்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு சாதனை கால அளவில் முடிக்கப்பட்டுள்ளது. புதிய நாடாளுமன்றத் திறப்பு விழா நாடாளுமன்ற வளாகத்தில் நாளை நண்பகல் 12 மணிக்கு நடைபெற இருக்கிறது. புதிய நாடாளுமன்றத்தை, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா முன்னிலையில் பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைக்க இருக்கிறார். விழாவில் பங்கேற்க மக்களவை மற்றும் மாநிலங்களவையின் உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், யூனியன் பிரதேச பொறுப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதியநாடாளுமன்றம் நாட்டின் பன்முகத்தன்மையைப் போற்றும் நோக்கில் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் பொருட்கள் வாங்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில் மிக முக்கிய அம்சமாக, நாடு சுதந்திரம் அடைந்தபோது அதை அடையாளப்படுத்தும் விதமாக நடைபெற்ற செங்கோல் வழங்கும் நிகழ்வில் திருவாவடுதுறை ஆதீனத்தால் வழங்கப்பட்ட செங்கோல் மீண்டும் பிரதமர் நரேந்திர மோடியிடம் வழங்கப்பட உள்ளது. இந்த செங்கோல், மக்களவை சபாநாயகரின் இருக்கையின் மேல் நிறுவப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை முன்னிட்டு, தமிழ்நாட்டின் திருவாவடுதுறை ஆதீனம், மதுரை ஆதீனம், தருமபுர ஆதீனம் உள்ளிட்ட 19 ஆதீனகர்த்தர்கள் டெல்லிசென்றுள்ளனர். அவர்களுடன் பாரம்பரிய இசைக் கலைஞர்களும் சென்றுள்ளனர்.

புதியநாடாளுமன்றம் முக்கோண வடிவில் கட்டப்பட்டுள்ளது. 4 மாடிகளைக்கொண்டது. நாடாளுமன்றத்தின் கட்டிட பரப்பளவு 64,500 சதுர மீட்டர். இந்த கட்டிடம் ஞான வாயில், சக்தி வாயில், கர்ம வாயில் என மூன்று வாயில்களைக் கொண்டுள்ளது. விஐபி-க்கள், எம்பிக்கள், பார்வையாளர்கள் செல்வதற்கு தனித்தனி வாயில்கள் இருக்கும்படி வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற மக்களவை 888 இருக்கைகள் கொண்டதாகவும், மாநிலங்களவை 300 இருக்கைகள் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் நடைபெறும்போது மக்களவையில் 1,280 பேர் அமரக்கூடிய வகையில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

## தென்காசியில் தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாக கொண்ட கூட்டு குடிநீர் திட்டங்கள் துவக்க விழா நிகழ்ச்சி

தென்காசி,மே.28-
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் உள்ள குடிநீர் வடிகால் வாரியத்தில் வைத்து தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் ரூபாய் 543.20 கோடி மதிப்பீட்டில் சங்கரன்கோவில், புளியங்குடி ,நகராட்சிகள் திருவேங்கடம்பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டம்ராஜபாளையம் நகராட்சி ,சிவகாசி மாநகராட்சி, திருத்தங்கல் நகராட்சி, மற்றும் ரூபாய் 50.5 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம் பாப்பாகுடி ஒன்றியத்தைச் சேர்ந்த 17 குக்கிராமங்கள் மற்றும் முக்கூடல் பேரூராட்சியில் ஒரு குக்கிராமம், தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியத்தை சேர்ந்த 31 குக்கிராமங்களுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாக கொண்ட கூட்டு குடிநீர் திட்டம் ஆகிய திட்டங்கள் துவக்க விழா நிகழ்ச்சி நடந்தது.



நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் துரை ரவிச்சந்திரன் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயசீலன் ஆகியோர் தலைமை வகித்தனர், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஷிவ்தாஸ்மீனா முன்னிலை வகித்தார், மதுரை தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய தலைமை பொறியாளர் ரகுபதி வரவேற்றார். சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர் தட்சிணாமூர்த்தி, சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குனர் பொன்னையா ஆகியோர் திட்ட விளக்க உரை ஆற்றினர். தொடர்ந்து எம்பிக்கள் தென்காசி தனுஷ் குமார் ,விருதுநகர் மாணிக்கம் தாகூர், எம்எல்ஏக்கள் சங்கரன்கோவில் ராஜா, வாசுதேவநல்லூர் சதன்திருமலைகுமார், ராஜபாளையம் தங்கபாண்டியன்,சிவகாசி அசோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.


தொடர்ந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ். ராமச்சந்திரன் , நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்புரை ஆற்றினர், நிகழ்ச்சியில் நகராட்சிநிர்வாகம்மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு கூட்டுக்குடிநீர்திட்டத்தை துவக்கிவைத்து பேசினார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேல், பரமகுரு, யூஎஸ்டிசீனிவாசன்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர்முத்துச்செல்வி, சங்கரன்கோவில் யூனியன் சேர்மன்கள் லாலாசங்கரபாண்டியன் , பொன்முத்தையா பாண்டியன், நகராட்சி சேர்மன்கள் சங்கரன்கோவில் உமாமகேஸ்வரிசரவணன், புளியங்குடி விஜயா சௌந்தர பாண்டியன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன்,மாவட்ட பொருளாளர் சரவணன் மாவட்ட துணைச் செயலாளர்கள், புனிதா, ராஜதுரை, மனோகரன் ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை, பூசைபாண்டியன் , கிறிஸ்டோபர், பெரியதுரை,சேர்மதுரை, ராமச்சந்திரன் , நகரச் செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ் புளியங்குடி அந்தோணிசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் சங்கரன்கோவில் மாரிச்சாமி, வேல்சாமிபாண்டியன், தேவா என்ற தேவதாஸ், வெள்ளத்துரை, சாகுல் ஹமீது, மாரிச்சாமி, பராசக்தி,மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சுப்பையா, மாவட்ட வர்த்தக அணி துணைச் செயலாளர் முனியசாமி, பேரூர்கழகசெயலாளர்கள் ,மாவட்ட மகளிர் அணித் தலைவர் அன்புமணி, துணைத்தலைவர் அண்ணாமலை, தொமுச மண்டல அமைப்புச் செயலாளர் மைக்கேல் நெல்சன், நகரத் துணைச் செயலாளர்கள்கேஎஸ்எஸ் மாரியப்பன் ,சுப்புத்தாய் ,இளைஞர் அணி சரவணன், மாணவரணி கார்த்தி, உதயகுமார், நகரப் பொருளாளர் லாசர் என்ற சதாசிவம் மற்றும் கார்த்தி, வீராசாமி, வீரமணி, கணேஷ், ஜெயக்குமார், பிரகாஷ், ஜான் சிவா, குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முடிவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வைபொறியாளர் செந்தூர்பாண்டி நன்றி கூறினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# புதுக்கோட்டை மாவட்ட சிறைச்சாலையில் போலீசார் அதிரடி சோதனை





புதுக்கோட்டை மே 28

புதுக்கோட்டை மாவட்ட சிறைச்சாலையில் சுமார் 50க்கும் மேற்பட்ட போலீசார் போதை பொருள், செல்போன் உள்ளிட்டவை பயன்படுத்தப்படுகிறதா என்றுதிடீர்சோதனையில் ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகம் அருகே மாவட்ட சிறைச்சாலை மற்றும் பார்ஸ்டல் பள்ளி உள்ளது. இங்கு 450-க்கும் மேற்பட்ட விசாரணை மற்றும் தண்டனை கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு வந்திதா பாண்டே உத்தரவின்பேரில் நேற்று காலையில்புதுக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு செல்வம் பொறுப்பு, போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் ரமேஷ்,மாறன் ஆகியோர் தலைமையில் 50-க்கும் மேற்பட்ட போலீசார் மோப்பநாய் உதவியுடன் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளியில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

போலீசார் கைதிகளின் ஒவ்வொரு அறையாக சென்று, அங்கு தீவிர சோதனை நடத்தினார்கள். குளிக்கும் அறை, கழிவறைகள் போன்றவற்றிற்கும்சென்று, போலீசார் சோதனை நடத்தினார்கள். சிறையில் உள்ள கைதிகளிடம் செல்போன்கள், போதை பொருட்கள், ஆயுதங்கள் போன்ற பொருட்கள் உள்ளதா? என போலீசார் சோதனை நடத்தினார்கள். சுமார் 2 மணி நேரத்திற்கும் மேல் நீடித்த இந்த சோதனையில் எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என போலீசார் தெரிவித்தனர். புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளியில் போலீசார் அதிரடி சோதனை நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# உளுந்தூர்பேட்டை நகர திமுக இளைஞர் அணி சார்பில் சாதனை விளக்க தெருமுனை கூட்டம்

கள்ளக்குறிச்சி, மே,28_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகர திமுக இளைஞரணி சார்பில், தமிழக அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.




இந்த சாதனை விளக்க தெருமுனை கூட்டம் நகரச் செயலாளர் டேனியல்ராஜ் தலைமையில், சிறப்பு அழைப்பாளர்களாக உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் மற்றும் தலைமை கழக பேச்சாளர் ஆரணி மாலா ஆகியோர் கலந்துகொண்டு திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை பொதுமக்கள் இடையே எடுத்துக்கூறி சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளரும் நகர்மன்ற தலைவருமான திருநாவுக்கரசு, ஒன்றிய செயலாளரும் நகர்மன்ற துணைத் தலைவருமான வைத்தியநாதன், ஒன்றிய செயலாளரும் ஒன்றியக் குழு தலைவருமான ராஜவேல், தலைமை செயற்குழு உறுப்பினர் விஜயகுமார், மாவட்ட கழக பொருளாளர் ஜெயராமன், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்லையா, ஆசிர்வாதம், ஒன்றியக் குழு துணைத் தலைவர் இளங்கோவன் மற்றும் மாவட்ட,ஒன்றிய, நகர நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி சஞ்சய் விஜயகுமார் கங்காபூர்வாலா இன்று பதவியேற்கிறார்

சென்னை மே 28

சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக சஞ்சய் விஜயகுமார் கங்காபூர்வாலா இன்று பதவியேற்கிறார். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சஞ்சய் விஜயகுமார் கங்காபூர்வாலா தற்பொழுது மும்பை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றி வருகிறார்.



தலைமை நீதிபதியாக சஞ்சய் விஜயகுமார் கங்காபூர்வாலாவுக்கு ஆளுநர் இன்று பதவி பிரமாணம் செய்து வைக்கிறார். மும்பை ஐகோர்ட் நீதிபதி சஞ்சய் விஜயகுமாரை சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதியாக நியமிக்க சுப்ரீம்கோர்ட் பரிந்துரைத்தது. உச்சநீதிமன்ற கொலீஜிய பரிந்துரையை ஏற்று சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதியாக சஞ்சய் விஜயகுமாரை ஜனாதிபதிநியமித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த டி.ராஜா 24ம் தேதியுடன் ஓய்வு பெற்றார். டி.ராஜா ஓய்வு பெற்றதால், சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதியாக சஞ்சய் விஜயகுமார் கங்காபூர்வாலாவை நியமிக்க கொலிஜியம் பரிந்துரைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஆலங்குடி அருகே 100 நாள் வேலை கேட்டு கிராம மக்கள் மறியல் போராட்டம்



ஆலங்குடி, மே. 28–

ஆலங்குடி அருகே 100 நாள் வேலை வழங்கக்கோரி கிராம மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

ஆலங்குடிஅருகேயுள்ள அணவயல் ஊராட்சியில் உள்ள 100 நாள் வேலை பணியாளர்களுக்கு சில மாதங்களாக வேலை வழங்கப்படவில்லை என கூறப்படுகிறது. இதுகுறித்து பலமுறை ஊராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டும்நடவடிக்கை இல்லையாம். இதனால், ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் அணவயல் பேருந்து நிறுத்தம் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்து சென்ற வடகாடு போலீஸார், ஊராட்சி நிர்வாகத்தினர் வேலை வழங்க உரிய நடவடிக்கை எடுப்பதாக அளித்த உறுதியளிப்பை ஏற்று போராட்டத்தில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர். இந்த மறியல் போராட்டத்தால் புதுக்கோட்டை - பேராவூரணி, பட்டுக்கோட்டை சாலையில் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# அரியலூர் நாயக்கர் பாளையம் கிராமத்தில் கிரிக்கெட் போட்டிகள் தொடங்கின

அரியலூர் மே 28

நாயக்கர் பாளையம் கிராமத்தில், கிரிக்கெட் போட்டிகள் தொடங்கியுள்ளது. அரியலூர் மாவட்டம், நாயக்கர் பாளையம் கிராமத்தில், ஆண்டவன் பாய்ஸ் குரூப் சார்பாக, ஐந்துநாட்கள்நடைபெறும் கிரிக்கெட் போட்டிகள் தொடங்கியுள்ளது. ஒருங்கிணைப்பாளர் ஜி. ராமச்சந்திரன் மேற்பார்வையில், கதிரேசன், பாலமுருகன், காமராஜ், அன்புதாசன், மற்றொரு பாலமுருகன்



உள்ளிட்டோர், முன் நின்று நடத்தும் கிரிக்கெட் போட்டியில், அரியலூர் மாவட்ட அளவில் எட்டு அணிகள் பங்கேற்கின்றன.

வெற்றி பெறும் அணிகளுக்கானபரிசுகளை, ஒருங்கிணைப்பாளர் ஜி ராமச்சந்திரன் வழங்குகிறார்.

# கம்பம் நகருக்குள் அரிசி கொம்பன் யானை புகுந்ததால் பரபரப்பு பொதுமக்கள் வெளியே வர தடை விதிக்கப்பட்டுள்ளது

தேனி மே 28

மீண்டும் தமிழ்நாட்டு எல்லைக்குள் நுழைந்த அரிசிக்கொம்பன் யானை. கம்பம் நகருக்குள் புகுந்து குடியிருப்பு பகுதிகளில் உலவி வருவதால் பொதுமக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது. கேரளாவின் இடுக்கி மாவட்டம் ராஜ காடு அருகே சின்னக்கள் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக காட்டில் சுற்றி திரிந்த அரிசிக்கொம்பன் யானையை மயக்க ஊசி செலுத்தி பிடிக்கப்பட்டது.



அன்றைய தினம் இரவே அரிசி கொம்பனை பெரியார் புலிகள் காப்பகத்திற்குட்பட்ட கண்ணகி கோட்ட வனப்பகுதியில் கேரளா வனத்துறையினர் விட்டனர். மேலும் அதன் நடமாட்டத்தை கண்காணிக்க கழுத்தில் ரேடியோ காலர் கருவி பொருத்தப்பட்டது. கேரள வனப்பகுதியில்விடப்பட்ட அரிசி கொம்பன் சில நாட்களில் தமிழ்நாட்டின் ஸ்ரீ வில்லிபுத்தூர், மேகமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட இரவங்கலாறு வனப்பகுதியில்நுழைந்தது.

இதனால்பொதுமக்கள் மேகமலைக்கு சுற்றுலா செல்ல வனத்துறையினர் தடை விதித்தனர். இதனிலையே அரிசி கொம்பன்யானைமீண்டும் இடம் பெயர்ந்து கேரள வனப்பகுதிக்கு சென்றது. இந்நிலையில் மீண்டும் தமிழ்நாட்டு எல்லைக்குள் புகுந்த அரிசிக்கொம்பன் கூடலூர் வழியாக கம்பம் நகருக்குள் புகுந்து குடியிருப்பு பகுதிகளில் உலாவி வருவதால் பொதுமக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

# கர்நாடக அமைச்சரவை விரிவாக்கம் ஒரு பெண் உள்பட 24 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்

பெங்களூரு மே 28

கர்நாடக அமைச்சரவை நேற்று விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஒரு பெண் உள்பட 24 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

கடந்த 10-ம் தேதி நடைபெற்ற கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அறுதிப்பெரும்பான்மை வெற்றியை பெற்றதை அடுத்து, அக்கட்சியின் மூத்த தலைவர் சித்தராமையா கடந்த 20ம் தேதி முதல்வராகப் பொறுப்பேற்றார். அவருடன் சேர்ந்து கட்சியின் மாநில தலைவர் டி.கே. சிவகுமார் துணை முதல்வராகப் பொறுப்பேற்றார். அதோடு, 8 பேர் அமைச்சர்களும் பதவியேற்றனர்.

இந்நிலையில், நேற்று அமைச்சரவை முழுமையாகவிரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஒரு பெண் எம்எல்ஏ உள்பட 24 எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இதற்கான விழா



பெங்களூருவில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. இந்த விழாவில் ஹெச்.கே. பாடில், கிருஷ்ண பைரே கவுடா, செலுவராயசாமி, கே. வெங்கடேஷ், மாகாதேவப்பா, ஈஸ்வர் கான்ட்ரே, தினேஷ் குண்டு ராவ், சிவானந்த பாடில், எஸ்.எஸ். மல்லிகார்ஜுன், லக்ஷ்மி ஹெப்பால்கர், ரஹிம் கான், சுதாகர், சந்தோஷ், மது பங்காரப்பா, நாகேந்திரா உள்பட 24 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். முதல்வர், துணை முதல்வர் முன்னிலையில் அவர்களுக்கு ஆளுநர் தவார் சந்த் கெலாட் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

கர்நாடக சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 34 பேர் அமைச்சர்களாக பதவியேற்க முடியும். அந்தவகையில், தற்போது முதல்வர், துணை முதல்வர் உள்பட 34 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர். இதன்மூலம், முழு அளவில் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 6 பேர் லிங்காயத் சமூகத்தையும், 4 பேர் வொகாலிகா சமூகத்தையும், 3 பேர் எஸ்சி சமூகத்தையும் சேர்ந்தவர்கள். எஸ்டி பிரிவைச் சேர்ந்த இருவர், ஓபிசி பிரிவைச் சேர்ந்த 5 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர். புதிய அமைச்சர்களுக்கு ஆளுநரும், முதல்வர் மற்றும் துணை முதல்வரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். பதவியேற்பை முன்னிட்டு ஆளுநர் மாளிகையில் ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

# கறம்பக்குடி பகுதியில் சூறைக்காற்றுடன் பெய்த கனமழையால் பயிர்கள் சேதம் : விவசாயிகள் வேதனை



கறம்பக்குடி, மே.28–

கறம்பக்குடி பகுதியில் சூறைக்காற்றுடன் பெய்த கன மழையால் பல ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் மற்றும் சோளப்பயிர்கள் காற்றில் சாய்ந்தும் மழைநீரில் மூழ்கியும் சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். தமிழ்நாடு அரசு அதிகாரிகள் மூலம் சேதமடைந்த பயிர்களை ஆய்வு செய்து உரிய நிவாரணம் வழங்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகவே கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வந்ததால் பொதுமக்கள் அவதி அடைந்து வந்தனர். இந்நிலையில் திடீரென மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் பலத்த காற்றுடன் கனமழை கொட்டி தீர்த்தது. ஒருபுறம் இந்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்து இருந்தாலும் காற்றுடன் பெய்த மழை விவசாயிகளுக்கு வேதனையை ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக கறம்பக்குடி தாலுகாவுக்கு உட்பட்ட மாங்கோட்டை கீழப்பட்டி மழையூர், பொன்னன்விடுதி உள்ளிட் பல கிராமங்களில் சூறைக்காற்றுடன் பெய்த கன மழையால் அப்பகுதியில் பல ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள், சோள பயிர்கள், வாழைமரங்கள் காற்றில் சாய்ந்தும் மழை நீரில் மூழ்கியும் முற்றிலுமாக சேதமடைந்துள்ளது.

செலவு செய்து பயிரிடப்பட்ட பயிர்கள் அறுவடை நேரத்தில் பாதிக்கப்பட்டதால் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சோகத்தில் மூழ்கி உள்ளனர். திடீர் மழையால் சேதமடைந்த பயிர்களை அரசு அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் வேதனையுடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அரியலூர் மாவட்டம் நடுவலூர் கிராமத்தில் ஜல்லிக்கட்டு போட்டி 25 பேர் காயம்

அரியலூர் மே 28

நடுவலூர் கிராமத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில், 25 பேர் காயம் அடைந்தனர்.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் அருகே நடுவலூர் கிராமத்தில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா அறிவுறுத்தல் படி நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டிகளை, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

நடுவலூர் ஊராட்சி மன்ற தலைவர் சரவணன், துணைத் தலைவர் அசோக், ஒன்றிய கவுன்சிலர் கல்யாண சுந்தரம், ஊராட்சி செயலாளர் தங்கவேலு, மற்றும் கிராம நாட்டாமைகளை ஒருங்கிணைப் பாளர்களாக கொண்டு நடத்தப்பட்ட, இந்த ஜல்லிக்கட்டு போட்டியில், 500க்கும் மேற்பட்ட ஜல்லிக்கட்டு காளைகள் கலந்து கொண்டன. வாடிவாசலில் இருந்து திறந்து விடப்பட்ட காளைகளை



அடக்கும் முயற்சியில், 180 ஜல்லிக்கட்டு வீரர்கள் ஈடுபட்டனர்.

காளைகளை அடக்கிய ஜல்லிக்கட்டு வீரர்கள், அவர்களுக்கு கட்டுப்படாமல் ஓடிய ஜல்லிக்கட்டு காளைகளின் உரிமையாளர்கள் ஆகியோர்களுக்கு, தங்க நாணயம், வெள்ளி நாணயம், சைக்கிள், டீ பாய், சில்வர் பாத்திரங்கள், பிளாஸ்டிக் சேர், உள்ளிட்டவை பரிசுப் பொருட்களாக வழங்கப்பட்டன. ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகள் முட்டியதில், 25 பேருக்கு லேசான காயம் அடைந்தனர். அவர்களுக்கு அங்கிருந்த மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

நடுவலூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில், அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்கும் முயற்சியில், அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஃபெரோஸ் கான் அப்துல்லா உத்தரவுப்படி, ஜெயங்கொண்டம் டிஎஸ்பி ராஜா சோமசுந்தரம் தலைமையில், டிஎஸ்பிக்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப்- இன்ஸ்பெக்டர்கள், போலீஸ் ஏட்டுகள், ஊர்க்காவல் படையினர் உள்பட, 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

# சென்னை காசிமேட்டில் கடலில் மீனவர் சடலம் தவறி விழுந்து உயிரிழப்பா? அடித்து கொலையா?

காசிமேடு, மே,28

தண்டையார் பேட்டை வ. உ. சி. நகர் பகுதியை சேர்ந்த மீனவர் சுரேந்தர் இவர் நேற்று இரவு 11மணிக்கு காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்க செல்வதற்காக வீட்டில் இருந்து சாப்பாடு கட்டிக் கொண்டு வந்துள்ளார்



மீன்பிடிக்க செல்ல மீனவர்கள் தயாராக இருந்த பொழுது சுரேந்தர் கொண்டு வந்த சாப்பாடு பை மட்டும் அங்கு இருந்துள்ளது வெகு நேரமாக தேடிப் பார்த்தோம் கிடைக்காததால் மீனவர்கள் சுரேந்தர் வீட்டுக்கு போன் செய்து சுரேந்தர் காணவில்லை என தெரிவித்துள்ளனர் இதனை அடுத்து மீனவர்கள் மீன்பிடித்து திரும்பினர் அப்பொழுது கரையில் சுரேந்தரின் உடல் கரையில் மிதந்து கொண்டிருப்பதை பார்த்த மீனவர்கள் அதிர்ச்சி அடைந்தனர் உடனடியாக காசிமேடு துறைமுகம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவலின் பெயரில் சம்பவ இடத்துக்கு விரைந்துவந்த போலீசார் உடலை கைப்பற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மீனவர் சுரேந்தர் கடலில் தவறி விழுந்து இறந்தாரா? அல்லது யாரும் அவரை அடித்து கடலில் தள்ளி கொலை செய்தனரா? என இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

# வெங்கல் ஊராட்சியில் நம்ம ஊரு சூப்பரு விழிப்புணர்வு பேரணியை எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் துவக்கி வைத்தார்

ஊத்துக்கோட்டை, மே28–



திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வெங்கல் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் நாம் ஒன்றிணைவோம்! பசுமையும்,தூய்மையும் நமதாக்குவோம்! என்ற அடிப்படையில் நம்ம ஊரு சூப்பரு என்ற விழிப்புணர்வு பேரணி மற்றும் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவது குறித்த பிரச்சாரம் நடைபெற்றது.

வெங்கல் பஜார் வீதியில் உள்ள அண்ணா சிலை அருகில் இருந்து துவங்கிய இப்பேரணி பல்வேறு வீதிகளின் வழியாக சென்றது. இந்நிகழ்ச்சிக்கு,ஊராட்சி மன்ற தலைவர் சுகந்திராணிலிங்கன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் எஸ்.கணபதி, வார்டு உறுப்பினர்கள் என்.மல்லீஸ்வரி, கே.காஞ்சனா, என்.தன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அனைவரையும் ஊராட்சி செயலர் ஜே.உமாபதி வரவேற்றார். வட்டார வளர்ச்சி அலுவலர் சத்தியமூர்த்தி விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றி கலந்து கொண்டனர். மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலாஜி, கார்த்திக் ஆகியோர் குப்பைகளை எவ்வாறு? தரம் பிரித்து வாங்க வேண்டும் என்று விளக்கிக் கூறினர். வட்டார ஒருங்கிணைப்பாளர் பிரதீப் மக்கும் குப்பை, மக்காத குப்பை,அபாயகரமான கழிவுகள் எவை? எவை? என்று பொதுமக்களிடமும், வியாபாரிகளிடமும், குடும்பத்தலைவிகளிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எடுத்துக் கூற வேண்டும் என்று தூய்மை பணியாளர்களுக்கு விளக்கி கூறினார்.இதன் பின்னர், ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு அரிசி, காய்கறிகள் அடங்கிய தொகுப்புகளை நலத்திட்ட உதவியாக வழங்கப்பட்டது.







சென்னை - கேரளாவில் இயங்கி வரும் வி எஸ் ஏ குரூப் நிருவனத்தின் சேர்மேன் டாக்டர் விஜயகுமாரின் பிறந்த நாள் நேற்று முந்தினம் அந்த நிருவன ஊழியர்கள் கொண்டாடினர்.மேலும் கேரளா, சென்னையில் உள்ள ஏழை எளியவர்களுக்கு புடவை, மதிய உணவு சேர்மேன் விஜயகுமார் வழங்கினார். இந்த நிலையில் விஜயகுமார் பிறந்த நாளைமுன்னிட்டு நேற்று அவரின் ஊழியர்கள் சார்பில் சென்னை மாதாவரத்தில் உள்ள தெரசா ஆதரவற்றோர் முதியோர்கள் இல்லத்தில் மதிய உணவு முதியோர்களுக்கு வழங்கப்பட்டது.

# அரியலூர் மாவட்டம் புதுப்பாளையம் கிராமத்தில் இலவச சிறப்பு மருத்துவ முகாம்

அரியலூர், மே. 28–

புதுப்பாளையம் கிராமத்தில் இலவச சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. அரியலூர் மாவட்டம், புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனை மற்றும் நெருஞ்சிக்கோரை கிராமத்தை சேர்ந்த ஸ்வீட் டிரஸ்ட் பாய்ஸ் குழுவினர் இணைந்து நடத்திய, சிறுநீரக நோய் மற்றும் பொது அறுவை சிகிச்சைக்கான, இலவச சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.



பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனையை சேர்ந்த, டாக்டர்கள் இர்ஃபான், ரூபன் மற்றும் மருத்துவ குழுவினர் முன்னிருந்து நடத்திய, இந்த மருத்துவ முகாம் துவக்க விழாவுக்கு, ரெட்டிபாளையம் அல்ட்ராடெக்சிமெண்ட் ஆலை துணை நிர்வாகி சிவகுமார் தலைமை வகித்தார். ஸ்வீட் டிரஸ்ட் பாய்ஸ் நிர்வாகி நெருஞ்சிக்கோரை இளவரசன் வரவேற்று பேசினார், புதுப்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் சுமதி பாண்டியன், துணைத் தலைவர் கருப்பையன், ஸ்வீட் டிரஸ்ட் உறுப்பினர்கள் பால்ராஜ், பாரதி, பாலு, பள்ளியின் தலைமை ஆசிரியை ஜெயந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்ட இந்த மருத்துவ முகாமில், சிறுநீரகம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் பொது அறுவை சிகிச்சை உள்ளிட்டவற்றுக்கான மருத்துவ ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் அறுவை சிகிச்சைக்காக தேர்வு பெற்றவர்களுக்கு, பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், அரசு காப்பீட்டு திட்டத்தின் மூலம், இலவசமாக அறுவை சிகிச்சை செய்யப்படும் என, முகாம் ஒருங்கிணைப்பாளர் இளவரசன் கூறினார்.

# காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டராக கலைச்செல்வி பொறுப்பேற்றார்

காஞ்சிபுரம்,மே,28

காஞ்சிபுரம் கலெக்டராக ஆர்த்தி பணிபுரிந்து வந்தார். அவர், 'சர்வ சிக் ஷா அபியான்' திட்ட இயக்குனராக நியமிக்கப்பட்டு உள்ளார்.



அவருக்கு பதிலாக, சென்னை நில அளவை மற்றும் நில ஆவண கூடுதல் இயக்குனராக பணிபுரிந்து வந்த கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் கலெக்டராக அரசு நியமித்தது. அவர் நேற்று முன் தினம் காலை பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.'

அரசு கொண்டு வரும் நல்ல திட்டங்களை, அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடையும் வகையில், மாவட்ட நிர்வாகத்தின் செயல்பாடுகள் இருக்கும்," என, அவர் தெரிவித்தார்.

# முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு நினைவு தினம் காரைக்காலில் அனுசரிப்பு



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி பகுதியில் முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 59வது நினைவு தினத்தையொட்டி காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த ஜவஹர்லால் நேருவின் திருவுருவப்படத்திற்கு மாவட்டத் தலைவர் சந்திரமோகன் தலைமையில் வட்டார காங்கிரஸ் தலைவர் மாறன், மகளிர் காங்கிரஸ் தலைவி நிர்மலா மற்றும் ஏராளமான காங்கிரஸ் பிரமுகர்கள் தொண்டர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட விவசாய அணி பொதுச் செயலாளர் சுப்புராயன் ஏற்பாடு செய்திருந்தார்.



டெல்லியில் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை பிரதமர் நரேந்திர மோடி நாளை(இன்று) திறந்து வைக்கிறார். இந்த நிலையில் நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவிற்கு குடியரசு தலைவர் அவர்களுக்கு அழைப்பு விடுக்காததை கண்டித்து புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டத்தில் தலித் பழங்குடியின மக்கள் கூட்டமைப்பு சார்பில் காரைக்கால் கடற்கரை சாலையில் 50க்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவிற்கு குடியரசு தலைவர் அவர்களுக்கு அழைப்பு விடுக்காததை கண்டித்து மத்திய அரசிற்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குடியரசுத் தலைவரை திறப்பு விழா நிகழ்ச்சிக்கு அழைக்காதது தலித் மற்றும் பழங்குடியின மக்களை அவமதிக்கும் வகையில் உள்ளதாகவும் போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டினர்.



மும்பை பொறுப்பு தலைமை நீதிபதி எஸ். வி.கங்காபூர்வாலா, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமனம் - குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உத்தரவு.




புதிய நாடாளுமன்றக் கட்டிட திறப்பு விழாவைக் குறிக்கும் வகையில், 75 ரூபாய் நாணயம் வெளியிடப்பட உள்ளது. இந்த 75 ரூபாய் நாணயத்தில் பாராளுமன்ற வளாகம் மற்றும் புதிய பார்லிமென்ட் கட்டிடத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். இந்த நாணயம் 44 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட வட்ட வடிவில் இருக்கும். 50 சதவீதம் வெள்ளி, 40 சதவீதம் தாமிரம், 5 சதவீதம் நிக்கல் மற்றும் 5 சதவீதம் துத்தநாகம் ஆகிய உலோகங்களை கொண்டு இந்த நாணயம் உருவாக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற வளாகத்தின் படத்திற்கு கீழே சர்வதேச எண்களில் "2023" ஆண்டு பொறிக்கப்படும்.

# எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் காரணியில் 2 ஆண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டம்

ஊத்துக்கோட்டை, மே28–

திருவள்ளூர் மத்திய மாவட்டம், எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் திராவிட மாடல் அரசின் 2 ஆண்டு கால சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரபொதுக்கூட்டம் கோடுவெளி ஊராட்சி, காரணி கிராமத்தில் உள்ள அரசு பள்ளி அருகே நடைபெற்றது.





இக்கூட்டத்துக்கு, எல்லாபுரம் மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் கோடுவெளி தங்கம்முரளி, மாவட்டத் துணைச் செயலாளர் வி.ஜெ. சீனிவாசன், ஒன்றிய அவைத்தலைவர் பி.ஜி. முனுசாமி ஆகியோர் தலைமை தாங்கினர். அனைவரையும் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் கோடுவெளி எம்.குமார், மாவட்ட பிரதிநிதி வக்கீல் கே.ஜி.அன்பு ஆகியோர் வரவேற்றனர்.

கூட்டத்தில் முன்னாள் தமிழக பால்வளத்துறை அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர், மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளரும், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் மதிவதனி ஆகியோர் கலந்துகொண்டு தமிழக அரசின் 2 ஆண்டு கால சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினர். இக்கூட்டத்தில் நிர்வாகிகள் கே.ஜே.ரமேஷ், சி.ஜெரால்ட், மாவட்ட பிரதிநிதிகள் ஜி.பாஸ்கரன், டி.பாஸ்கர், காரணி எம்.சத்யா, ஆயிலச்சேரி எஸ்.ரகு, கே.டி.எம்.வேலு, ஊராட்சி மன்றத் தலைவர்கள் லட்சுமிமுரளி, சித்ராகுமார், தாமரைப்பாக்கம் கீதாதுளசிராமன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில், ஏ.கே.எம். சரத்குமார் நன்றி கூறினார்.

# மதுராந்தகத்தில் சென்னை எம்.என். கண் மருத்துவமனை இலவச கண் பரிசோதனை முகாம்

செங்கல்பட்டு, மே, 27 –

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அடுத்த அரையப்பாக்கம் கிராமத்தில் ஷோபா பதம்சலானி பவுண்டேசன், சென்னை எம்.என் கண் மருத்துவமனை, எஸ்பிசி பவுண்டேசன், ஜேக்கப்ஸ் சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் மற்றும் மதுராந்தகம் வர்த்தகர் சங்கம் ஆகியவற்றின் சார்பாக இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.



இந்தகண்பரிசோதனை முகாமில் கண்ணில் நீர் வடிதல் பார்வை கோளாறு கண்ணில் புரை வளர்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சென்னை எம்.என் கண் மருத்துவமனையை சேர்ந்த 200க்கும்மேற்பட்ட மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தனர். இம்முகாமில் கீழ்வலம், கருங்குழி, மேலவேலம்பேட்டை, பூதூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர்.

இந்த முகாமில் 23 நபர்கள் இலவச கண்புரை அறுவை சிகிச்சைக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 150 நபர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டது. முகாமில் கலந்துகொண்ட அனைவருக்கும் இலவச மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டது.

# மெய்யூர்–நம்பாக்கம் ஊராட்சிகளில் தமிழக அரசின் 2 ஆண்டு சாதனைகளை விளக்கி தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள்

ஊத்துக்கோட்டை, மே28–

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பூண்டி கிழக்கு மற்றும் பூண்டி வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் தமிழக அரசின் 2 ஆண்டு கால சாதனைகளை விளக்கி தெருமுனை பிரச்சாரக் கூட்டம் மெய்யூர் மற்றும் நம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்றது.





இக்கூட்டங்களுக்கு, ஒன்றிய செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், பொன்னுசாமிஜான் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு தமிழக அரசின் 2 ஆண்டு கால சாதனைகளை விளக்கி பேசினார். இக்கூட்டங்களில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.வி. லோகேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், ஊராட்சி மன்றதலைவருமான பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை பூண்டி கிழக்கு மற்றும் வடக்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.



காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் நேற்று காலை பிரசித்தி பெற்ற சனீஸ்வர பகவான் ஆலயத்திற்கு சென்று பார்வையிட்டார். பக்தர்கள் பயணிக்கும் வரிசை படுத்துதல் சம்பந்தமாக ஆய்வு செய்த ஆட்சியர் பக்தர்களுக்கு எளிதான தரிசனம் கிடைக்க கோயில் நிர்வாகத்திடம் ஆலோசனை வழங்கினார். மேலும் உனவு பரிமரிக்கும் மடம் மற்றும் அனைத்து கோயில் இடங்களையும் தூய்மையாக பராமரிக்கும் படியும் கோயில் நிர்வாக அதிகாரியிடம் கேட்டுக் கொண்டார். மேலும் கோயில் யானையை ஒரே இடத்தில் நிற்க வைக்காமல் யானை பாகனிடம் இளைப்பாற இட்டுச் சென்று வருமாறு ஆலோசனை கூறினார். இந்நிகழ்வில் கோயில் நிர்வாக அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

# கால்நடைக்கு புல் அறுக்க சென்ற பெண்ணை கொன்று உடலை சாப்பிட்ட 'சைக்கோ' இளைஞன்



ஜெய்ப்பூர்,மே.28-

கால்நடைக்கு புல் அறுக்க சென்ற 65 வயது பெண்ணை கொன்று அவரின் உடலை சாப்பிட்ட சைக்கோ இளைஞரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ராஜஸ்தான் மாநிலம் பளி மாவட்டம் செந்த்ரா நகரில் அமைந்துள்ள கிராமம் சாரதானா. இந்த கிராமத்தை சேர்ந்த சாந்தி தேவி (வயது 65) கடந்த வெள்ளிக்கிழமை தனது வீட்டில் உள்ள கால்நடைக்கு புல் அறுக்க அருகில் உள்ள வயல் பகுதிக்கு சென்றுள்ளார். அப்போது, அங்கு வந்த இளைஞர் சாந்தி தேவியை கடுமையாக தாக்கி கல்லால் அடித்து கொலை செய்தார். பின்னர், சாந்தி தேவியின் உடலை அந்த சைக்கோ இளைஞர் சாப்பிட்டுள்ளார். அப்போது, அவ்வழியாக கால்நடைக்கு புல் அறுத்துவிட்டு வீடு திருப்பிக்கொண்டிருந்த மற்றொரு பெண் உயிரிழந்த பெண்ணின் உடலை இளைஞர் சாப்பிட்டுக் கொண்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்து அங்கிருந்து ஓடி கிராம மக்களை அழைத்து வந்தார்.

உடனடியாக அங்கு விரைந்த கிராமத்தினர் முகம் முழுவதும் ரத்தம் படிந்த நிலையில் இருந்த அந்த இளைஞரை விரட்ட முயற்சித்தனர். ஆனால், அந்த இளைஞரின் செயல்பாடுகளால் அதிர்ச்சியடைந்த கிராம மக்கள் அருகில் செல்ல பயப்பட்டனர். கிராம மக்கள் சூழ்ந்ததால் அதிர்ச்சியடைந்த அந்த இளைஞர் அங்கிருந்து தப்பியோட முயன்றார். இதையடுத்து சுற்றி வளைத்த கிராம மக்கள் அந்த இளைஞரை பிடித்து தாக்கினர். பின்னர் போலீசாருக்கும் தகவல் கொடுத்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார், கொல்லப்பட்ட சாந்தி தேவியின் உடலை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் பிரேதபரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், அந்த இளைஞரை கைது செய்த போலீசார் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் இருந்ததால் அவரையும் மருத்துவமனையில் அனுமதித்தனர். அதன் பின் போலீசார் நடத்திய விசாரணையில், சாந்தி தேவியை கொலை செய்த இளைஞர் மும்பையை சேர்ந்த சுரேந்திர தாகூர் (வயது 24) என்பது தெரியவந்தது. சுரேந்திரா கடந்த சில மாதங்களுக்கு முன் தெருநாய்கடித்து ரேபிஸ் வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். உரிய சிகிச்சை பெறாததால் ரேபிஸ் வைரஸ் பாதிப்பு உச்சமடைந்துள்ளது. ரேபிஸ் பாதிப்பால் மன ரீதியிலாக பாதிக்கப்பட்டு சைக்கோ நிலைக்கு சென்றதும் மருத்துவ பரிசோதனையில் தெரியவந்துள்ளது. சிகிச்சைக்கு பின் சுரேந்திராவிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்த உள்ளனர்.

# டெல்லியில் கோப்புகள் திருட்டா? – அரசு குடியிருப்பு, மதுபான வரி ஊழலை மறைப்பதாக சிசிடிவி பதிவுகளுடன் பாஜக புகார்

புதுடெல்லி , மே.28-

முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலின் அரசு குடியிருப்பு, மதுபான வரி விலக்குகள்மீதான கோப்புகள் திருடப்பட்டிருப்பதாக புகார் கிளம்பியுள்ளது. அதுதொடர்பான ஆதாரங்கள் என சிசிடிவி காட்சிப் பதிவுகளை டெல்லி பாஜக வெளியிட்டுள்ளது.

ஆம் ஆத்மி கட்சி ஆளும் டெல்லியின் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் மீது இரண்டு முக்கிய ஊழல் புகார்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில், மதுபான வரிவிலக்கு ஊழலில் சிக்கிய துணை முதல்வர் மணிஷ் சிசோடியா கைதாகி திஹார் சிறையில் உள்ளார். இதையடுத்து, தனது அரசு குடியிருப்பை புதுப்பிப்பதில் பல கோடி ஊழல் செய்திருப்பதாக முதல்வர் கேஜ்ரிவாலுக்கு நெருக்கடி உருவாகி வருகிறது. இதை பாஜகவுடன் காங்கிரஸும் எழுப்பிவரும் சூழலில், அதுதொடர்பான முக்கிய கோப்புகள் திருடப்பட்டிருப்பதாகப் புகார் கிளம்பியுள்ளது.

டெல்லியின் தலைமை செயலகத்தில் ஊழல் தடுப்பு அதிகாரியான ஒய்.வி.வி.ஜே.ராஜசேகரின் அரசு அலுவலகம் உள்ளது. இதிலுள்ள அவரது அறையில் முக்கிய கோப்புகள் இருந்துள்ளன. இவர் மீது புகார் வந்ததாகக்கூறி ஆம் ஆத்மி அரசு கடந்த மே 15ல் ராஜசேகரை அந்த பொறுப்புகளில் இருந்து விலக்கியது. நான்கு தினங்களுக்கு முன் டெல்லியின் துணைநிலை ஆளுநர் அவருக்கு அனைத்து பொறுப்புகளையும் அளித்திருந்தார். இந்நிலையில், அதிகாரி ராஜசேகர் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்ட சமயத்தில்



அவரது அறையிலிருந்து கோப்புகள் திருடப்பட்டதாக டெல்லி பாஜகவினர் புகார் கூறியுள்ளனர்.

இதற்கு ஆதாரமாக அவர்கள் மே 16-ம் தேதியின் ஒரு சிசிடிவி காட்சியையும் வெளியிட்டுள்ளனர். இதில், நள்ளிரவு 2 மணிக்கு அதிகாரி ராஜசேகரின் அறையினுள் 3 பேர் புகுந்து கோப்புகளுடன் வெளியேறுகின்றனர். இது குறித்து டெல்லி சட்டப்பேரவையின் எதிர்கட்சித் தலைவரான ராம் சிங் பிதூரி கூறும்போது, 'மாலை 6 மணிக்கு பிறகு தலைமை செயலகத்தில் நுழையத் தடை இருக்கும்போது அந்த 3 பேர் உள்ளே சென்றது எப்படி? இவர்கள் அனைத்து ஊழல் கோப்புகளையும் திருடியுள்ளனர்.

இதற்கு தார்மிகப் பொறுப்பேற்று முதல்வர் கேஜ்ரிவால் தன் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். இதன் மீது பாஜக டெல்லி காவல்துறையிடம் புகார் அளிக்க உள்ளது' எனத் தெரிவித்தார்.

இதனிடையே, டெல்லி அரசு அதிகாரிகள் மீது மத்திய அரசு இட்ட அவசர சட்டத்தை எதிர்க்க முதல்வர் கேஜ்ரிவாலின் எதிர்கட்சிகளுடனான சந்திப்பு தொடர்கிறது. இதற்காக அவர் வெள்ளிக்கிழமை தேசியவாதக் காங்கிரஸ் தலைவர் சரத்பவாரை சந்தித்து ஆதரவு பெற்றுள்ளார்.

சனிக்கிழமை தெலங்கானா முதல்வரும் பாரதிய ராஷ்டிரிய சமிதியின் தலைவருமான கே.சந்திரசேகர ராவையும் சந்திக்கிறார். அடுத்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே, ராகுல்காந்தியையும் சந்திக்க நேரம் கேட்டுள்ளார். இந்தச் சந்திப்பிற்கு முன்பாக அவர், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், மறைந்த முன்னாள் டெல்லி முதல்வர் ஷீலா தீட்சித் குடும்பத்தினர் மற்றும் சோனியா காந்தி குடும்பத்தினரிடம் மன்னிப்பு கோர வலியுறுத்தப்பட்டுள்ளது. இதை டெல்லி காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரான அல்கா லம்பா வலியுறுத்தி உள்ளார். ஏனெனில், இதற்கு முன் பாஜகவிற்கு எதிராக எதிர்கட்சிகள் கூட்டிய கூட்டங்களின் அழைப்பை முதல்வர் கேஜ்ரிவால் நிராகரித்திருந்தது நினைவுகூரத்தக்கது.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் பிரசித்தி பெற்ற பெரியநாயகி அம்பாள் உடனுறை அரங்குலநாதர் கோவில் வைகாசி விசாக பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் நடைபெற்று வருகின்றது, தினமும் சுவாமி அம்பாள் காலை இரவு நேரங்களில் சிம்ம வாகனம், காளை வாகனம் ,காமதேனு வாகனம், அண்ண வாகனம், வெள்ளி வாகனம் இந்த பல்வேறு வாகனங்களில் வீதி உலா நடைபெற்று வருகின்றது. மூன்றாம் நாள் முத்தரையர் மண்டகப் படி யை முன்னிட்டு சாமியம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் சிறப்பு வழிபாடு நடைபெற்று பட்டாடை உடுத்தி மலர் அலங்காரம் செய்து வாணவேடிக்கை மேளதாளத்துடன் வீதி உலா நடைபெற்றது.

# தென்காசி மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டி




தென்காசி , மே.28-

தென்காசி மாவட்டம் - புளியங்குடியில் பாரத மாதா கைப்பந்து குழு நடத்தும் 29 ஆம் ஆண்டு மற்றும் சி. ஹரிஹர சுதன் நினைவு இரண்டாம் ஆண்டை முன்னிட்டு ,ஒரு நாள் மின்னொளி கைப்பந்து போட்டி டி.என். புதுக்குடியில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக தென்காசி வடக்கு மாவட்ட திமுக கழக செயலாளரும், சங்கரன்கோவில் எம்எல்ஏ ராஜா ஈஸ்வரன் அவர்களும், புளியங்குடி நகர செயலாளர் எ.அந்தோணிசாமி அவர்களும் கலந்து கொண்டு கைப்பந்து குழு ஆட்டத்தை தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட கைப்பந்து குழு தலைவர் எம். சங்கர பாண்டியன், செயலாளர் வக்கீல்கே. சுபாஷ் சந்திரபோஸ், பொருளாளர் முருகேசன் ஆகியோர் தலைமையேற்று நடத்தினர், மற்றும் மாவட்ட பிரதிநிதி சுரேஷ், கூட்டுறவு சங்கத் தலைவர் விஜயா பாண்டியன், பொருளாளர் காஜா மைதீன், விக்ரம் மணிகண்டன், சேக் மைதீன், ஜெகதீஸ், அக்ரி சந்திரன், நகர் மன்ற உறுப்பினர் பாலசுப்பிரமணியன், மாவட்ட தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கிப்ட்ஸ்சன் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். 60க்கும் மேற்பட்ட வெளிமாவட்டங்களில் உள்ள கைப்பந்து குழு அணி விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு விளையாடினர். இதில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு முதல் மூன்று அணிகளுக்கு சுழற் கோப்பையும், ரொக்க பரிசும் வழங்கப்பட உள்ளன.

# மலையாள சினிமாவில் ரூ.150 கோடி வசூலித்த முதல் படம் டோவினோவின் '2018' சாதனை



கேரளா , மே.28-

மலையாள திரையுலகில் ரூ.150 கோடியை வசூலித்த முதல் திரைப்படம் என்ற பெருமையை பெற்றிருக்கிறது டோவினோ தாமஸின் '2018'. படம் வெளியாகி 23 நாட்களைக் கடந்தும் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

ஜூட் அந்தனி ஜோசப் இயக்கத்தில் கடந்த மே 5-ம் தேதி திரையரங்குகளில் வெளியான மலையாள திரைப்படம் '2018'. இந்தப் படத்தில் டோவினோ தாமஸ், ஆசிஃப் அலி, குஞ்சாகா போபன், வினீத் ஸ்ரீனிவாசன், அபர்ணா பாலமுரளி, லால், கலையரசன், நரேன் உள்ளிட்ட நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளனர். நோபின் பால் இசையமைத்துள்ள இப்படம் கடந்த 2018-ல் கேரளா சந்தித்த பெருவெள்ளத்தை அடிப்படையாககொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வரும் '2018' பாக்ஸ் ஆபீஸிலும் 'மாஸ்' காட்டி வருகிறது. இன்றும் கேரளாவில் படம் ஹவுஸ்ஃபுல்லாக ஓடிக்கொண்டிருக்கிறது. படம் வெளியாகி 11 நாட்களில் ரூ.100 கோடி வசூலை குவித்துள்ளது. இதன்மூலம் மலையாள சினிமாவில் அதிவேகமாக ரூ.100 கோடி வசூலை குவித்த படம் என்ற பெருமையை '2018' பெற்றுள்ளது. இதற்கு முன்னதாக பிரித்விராஜ் இயக்கத்தில் மோகன்லால் நடித்த 'லூசிஃபர்' திரைப்படம் 12 நாட்களில் ரூ.100 கோடி வசூலித்து சாதனை படைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்போது, படம் வெளியாகி 23 நாட்கள் கடந்தநிலையில், இதுவரை உலகம் முழுவதும் படம் ரூ.150 கோடியை வசூலித்துள்ளது. இதன் மூலம் மலையாள சினிமாவின் முதல் ரூ.150 கோடி வசூலித்த படம் என்ற பெருமையை '2018' பெற்றுள்ளது. இதனிடையே, நேற்று முந்தினம் (மே 26) படம் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் டப் செய்யப்பட்டு வெளியானது. அந்த வகையில் தெலுங்கில் படம் ரூ.1.1 கோடியை வசூலித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆசிய இங்கிலாந்து வர்த்தக சந்திப்பில்

# புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் சிபிஎஸ்சி இண்டர்நேஷனல் பள்ளிக்கு விருது



புதுக்கோட்டை, மே.28-

இங்கிலாந்து பாராளுமன்றத்தில் உள்ள ஹவுஸ் ஆப் காமன்சில் ஆசிய இங்கிலாந்து வர்த்தக சந்திப்பில் விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில்

மௌண்ட் சீயோன் இண்டர்நேஷனல் சிபிஎஸ்சி பள்ளி முழுமையான சிறந்த கல்வியை அளித்தமைக்காக விருது பெற்றது, இவ்விருதினை இங்கிலாந்து நாடாளுமன்றஉறுப்பினர் லார்ட் ரிச்சர்ட் இர்வின் ஹாரிங்டன் மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவர் ஜோனத்தன் ஜெயபரதன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இங்கிலாந்து மற்றும் இந்தியாவைச் சேர்ந்த அரசியல் வணிக மற்றும் கல்வித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களான பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் சீமாமல் ஹோத்ரா மற்றும் லண்டன் துணை மேயர் ராஜேஷ் அகர்வால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் நடக்கும் சிலம்பம் போட்டியில் ஆவுடையார்கோவில் மாணவர்கள் அபார வெற்றி




ஆவுடையார்கோவில் மே 28

ஊட்டியில் அண்ணா ஸ்டேடியத்தில் நேற்று நடைபெற்ற சவுத் இந்தியா அளவிலான சிலம்பம் போட்டியில் ஆவுடையார்கோவிலை சேர்ந்த 11 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இதில் மாஸ்டர் சரவணன் அவர்கள் தலைமையில் கீழ் சிலம்பம் பயிற்சி பெற்ற மாணவர்களில் முதல் இடத்தில் ஆவுடையார்கோயில் பகுதியைச் சேர்ந்த ஆர்த்தி, கனிஷ்கா, முத்து இருளப்பன், ஜனனி, மோனிஸ்கான் ஆகிய மூன்று மாணவர்கள் முதல் இடத்திலும், இரண்டாவது இடத்தில் இரண்டு பேரும் சேர்ந்து மொத்தத்தில் ஐந்து மாணவர்கள் போட்டியில் தேர்வு பெற்றது மிகுந்த பெருமையை ஏற்படுத்தியுள்ளதாகசிலம்ப பயிற்சியாளர்கள் உட்பட ஆவுடையார்கோவில் பகுதியைசேர்ந்தவர்கள் பெருமை கொள்கிறார்கள். இது போன்று அனைத்து பயிற்சிகளிலும் சான்றிதழ் உட்பட பதக்கங்களை வெல்ல வேண்டும் என்று ஆவுடையார்கோவில் பகுதி பொதுமக்கள் விரும்புகிறார்கள்.

# கனிம வளங்கள் கேரளாவிற்கு கொண்டு செல்வதை கண்டித்து செங்கோட்டையில் அதிமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி மே 28

தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் தமிழ்நாட்டில் இருந்து கேரளாவிற்கு கனிம வளங்கள் கொண்டு செல்வதை தடுத்து நிறுத்த கோரி அதிமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிர்க்கட்சி துணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆர் பி உதயகுமார் தலைமை வகித்து ஆர்ப்பாட்டத்தை துவக்கிவைத்து சிறப்புரை ஆற்றினார். தென்காசி வடக்கு மாவட்ட செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா, தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செல்வ மோகன் தாஸ் பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாநில அரசை கண்டித்து பல்வேறு கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் முன்னாள் அமைச்சர் ஆர் பி உதயகுமார் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், தமிழகத்தில் இருந்து கேரளாவிற்கு சமீப காலமாக கனிம வளங்களானது கொள்ளை அடித்து செல்லப்பட்டு வருகிறது, இதனால் தமிழர்களின் எதிர்கால வாழ்வாதாரம் என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

இதனைதடுக்கவில்லை என்றால் மிகப்பெரிய விளைவுகளை தமிழக அரசு சந்திக்க நேரிடும். பாராளுமன்ற புதிய கட்டிட திறப்பு விழாவில் பங்கேற்க எதிர்க்கட்சிகளுக்கு கொடுத்துவைக்கவில்லை, தமிழர்களின் பெருமையை நிலைநாட்ட உள்ள செங்கோல் டெல்லியில் ஆட்சி செய்வதைகாண அவர்களுக்கு கொடுத்து வைக்கவில்லை என்றும் வருமானவரித் துறையினர் சோதனையை தடுத்து நிறுத்தும் அளவிற்கு திமுகவினரின் அராஜகம் அதிகரித்து உள்ளதாகவும், இதன் மூலமே தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முதல்வரின் வெளிநாட்டு பயணம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெயரில் கேள்வி எழுப்பிய எடப்பாடி பழனிச்சாமி மீது வாந்தி எடுப்பது போல் அரசியல் நாகரிகம் தெரியாமல் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியிருப்பது கண்டனத்திற்குரியது என்றும் அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி, முன்னாள் எம்பி பிரபாகரன், தஞ்சை கணேசராஜா, மாவட்ட அவைத் தலைவர் சண்முகசுந்தரம், பொய்கை மாரியப்பன், கண்ணன், குத்தாலப் பெருமாள், பொதுக்குழு உறுப்பினர் கசமுத்து, தென்காசி கூட்டுறவு சங்கர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# ஊருக்குள் புகுந்த அரிக்கொம்பன் யானை : 144 தடை உத்தரவை மீறி யானை இருக்கும் பகுதிக்கு வந்த 20 பேர் கைது

தேனி, மே.28-

கேரள மாநிலத்தில் 7 பேரை கொன்று அட்டகாசம் செய்து வந்த அரிக்கொம்பம் யானையை, கடந்த மாதம் மயக்க ஊசி போட்டு வனத்துறையினர் பிடித்தனர். பின்பு அதனை தமிழக - கேரள எல்லை பகுதியில் உள்ள பெரியாறு புலிகள் சரணாலயத்தில் வனத்துறையினர் விட்டனர், ஆனால் அந்த யானை தேனி மாவட்டம் மேகமலை எஸ்டேட் பகுதிக்கு சென்று, அங்கு உள்ள தொழிளாளர்கள் மற்றும் அவர்களின் குடியிருப்புகளை நாசம் செய்தது. இந்நிலையில், அரிக்கொம்பன் யானை கூடலூரில் லோயர் கேம்ப் பகுதியில் உள்ள தென்னந்தோப்புகளை நாசம் செய்ததாக பொது மக்கள் வனத்துறை மற்றும் போலீசாரிடம் தகவல் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற தமிழக, கேரள போலீசார் தொழிலாளர்கள் அங்கு செல்ல தடை விதித்தனர். அதன் பின்னர் பெறும் முயற்சிக்கு பின்பு வனத்துறையினர், அரிக்கொம்பன் யானையை வனப்பகுதிக்குள் விரட்டினர்.

இந்நிலையில் யானை தேனி மாவட்டம் கம்பம் பகுதிக்கு வந்து அங்குள்ள குடியிருப்பு பகுதிக்குள் புகுந்தது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும்



பதற்றம் அடைந்தனர். வனத்துறையினர் யானையை பின் தொடர்ந்து பொதுமக்களை பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். கடந்த மாதம் யானை பிடிக்கப்பட்டு பெரியார் புலிகள் காப்பகத்தில் விடப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் கம்பத்திற்கு வந்துள்ளது. இதுவரை 18 பேரை கொன்று அட்டகாசம் செய்துவரும் அரிக்கொம்பன் யானை, மீண்டும் குடியிருப்பு பகுதியில் புகுந்ததால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தேனி, கம்பம் நகராட்சியில் 144 தடை உத்தரவு பிறப்பித்து உத்தமபாளையம் கோட்டாட்சியர் ஆணையிட்டுளார்.

குமுளி லோயர் கேம்ப் பகுதியிலிருந்து காலையில் கம்பம் நகரில் அரிக்கொம்பன் நுழைந்த நிலையில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கம்பத்தில் அரிக்கொம்பன் யானை நடமாடும் நிலையில் மக்கள் தேவையின்றி வெளியே வருவதை தடுக்க தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் 144 தடை உத்தரவை மீறி அரிக்கொம்பன் யானை இருக்கும் பகுதிக்கு வந்த 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் யூடியூபர்கள் டிரோனை பறக்க விட்டு யானையை படம் பிடிப்பதால் மிரண்ட யானை புளியந்தோப்பில் இருந்து வெளியேறி வாழை தோப்பிற்குள் புகுந்தது. யூடியூபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.




# தமிழகத்தில் 3 அரசு மருத்துவக் கல்லூரிகள் அங்கீகாரத்தை இழக்கும் அபாயம்

# டெல்லி மதுபான கொள்கை ஊழலை விட தமிழகத்தில் பல நூறு மடங்கு ஊழல்





# சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி இன்று பதவியேற்கிறார்

சென்னை / புதுக்கோட்டை | 28.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

வினாயக் தாமோதர் சாவர்க்கர் , இந்தியக் கவிஞர், அரசியல்வாதி (பி.1883) (இ.1966)



குடந்தை ப. சுந்தரேசனார் , தமிழகத் தமிழறிஞர், இசை ஆய்வாளர் (பி.1914) (இ.1981)



என். டி. ராமராவ் , தென்னிந்திய நடிகர், இயக்குநர், ஆந்திராவின் 10வது முதலமைச்சர் (பி.1923) (இ.1996)




## இன்றைய நினைவு நாள்

சாமுவேல் ஃபிஸ்க் கிறீன் , தமிழ் மருத்துவ முன்னோடி, அமெரிக்கக் கிறித்தவ ஊழியர் (பி.1822) (இ.1884)



ஆ. பூவராகம் பிள்ளை , தமிழகத் தமிழறிஞர் (பி.1899) (இ.1973)



உலிமிரி இராமலிங்கசுவாமி , இந்திய மருத்துவ அறிஞர் (பி.1921) (இ.2001)



## மாதவிடாய் சுகாதார நாள்